TNNG020094462021

உதவி அமர்வு / தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

உதவி அமர்வு நீதிபதி/ தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 03 ஆம் தேதி வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 19 ஆம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.157/2021**

( நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், நாகப்பட்டினம்)

முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.32/2018

**CNR.No.TNNG02-009446-2021**

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>வெளிப்பாளையம் காவல் நிலையம்<br>குற்ற எண்.160/2018. |
| 2 | எதிரிகள் | 1. அருண்குமார், ஆ/வ. 28/2018,<br>த/பெ. மொக்கமாயன்,<br>நெ.127, சுனாமி குடியிருப்பு,<br>செல்லூர்.<br><br>2. **மாரியப்பன், ஆ/வ.26/2018, (Died)**<br>**த/பெ. ராஜேந்திரன்,**<br>**தாமரைக்குளம் தென்கரை,**<br>**வெளிப்பாளையம்.**<br><br>3. விஜய் (எ) பாய், ஆ/வ.23/2018,<br>த/பெ. மூர்த்தி,<br>தாமரைக்குளம் தென்கரை,<br>வெளிப்பாளையம். |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:26:55 +0530

| | | |
|---|---|---|
| | | 4. சபரிநாதன், ஆ/வ. 19/2018,<br>த/பெ. மோகன்,<br>சிவன் திருக்குளம் மேல்கரை,<br>வெளிப்பாளையம்.<br><br>5. சிவா, ஆ/வ. 24/2018,<br>த/பெ. ரமேஷ்,<br>சமத்துவபுரம், பாப்பாகோவில்,<br>நாகப்பட்டினம். |
| 3 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | இவ்வழக்கு எதிரிகள் கடந்த 14.06.2018 ஆம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 4 | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | இவ்வழக்கு எதிரிகள் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் Crl.M.P. No.2521/2018ல் கடந்த 13.08.2018 ஆம் தேதி பிறப்பித்த பிணை உத்தரவுபடி, கடந்த 16.08.2018 ஆம் தேதி பிணையில் சென்றுள்ளனர். மீண்டும் 1ம் எதிரி இவ்வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், பிணையில் விடா பிடியாணையின் மூலம் ஆஜர் செய்யப்பட்டு இந்நீதிமன்ற உத்தரவுபடி, கடந்த 29.04.2026 ஆம் தேதி முதலும், 3ம் எதிரியை ஆஜர் செய்யப்பட்டு, கடந்த 14.02.2026 ஆம் தேதி முதலும், நீதிமன்ற காவலில் இருந்து இவ்வழக்கில் ஆஜர் செய்யப்பட்டு வந்தனர். 5ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்ததால், இந்த வழக்கு சம்பந்தமாக கடந்த 03.06.2026 ஆம் தேதி முதல் PT வாரண்ட் மூலம் ஆஜர் செய்யப்பட்டு வந்தார். |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் முதல் | கடந்த 03.09.2018 ஆம் தேதி நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் குற்ற |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:02 +0530

<table>
<tr><td></td><td>நிலை பதிவேட்டு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td colspan="3">அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அன்றே முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.32/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.</td></tr>
<tr><td>6</td><td>அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினத்திற்கு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தரவு நாள்</td><td colspan="3">08.10.2021</td></tr>
<tr><td>7</td><td>கு.வி.மு.ச.பிரிவு 228ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">24.06.2026</td></tr>
<tr><td>8</td><td>வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள்</td><td colspan="3">இவ்வழக்கு எதிரிகளில் 1ம் எதிரி மீது இதச பிரிவு 395ன் கீழும், 3 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 395 உ/இ.149ன் கீழும்.</td></tr>
<tr><td>9</td><td>எதிரிகளின் கோரிக்கை</td><td colspan="3">பொய் வழக்கு. குற்றவாளிகள் இல்லை.</td></tr>
<tr><td>10</td><td>இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td rowspan="3">11</td><td rowspan="3">இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம்</td><td>அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>29.06.2026</td><td>--</td></tr>
</table>

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:09 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.3 | 29.06.2026 | 29.06.2026 |
| | | அ.சா.4 | 29.06.2026 | 29.06.2026 |
| | | அ.சா.5 | 29.06.2026 | 29.06.2026 |
| | | அ.சா.6 | 02.07.2026 | -- |
| | | அ.சா.7 | 02.07.2026 | 02.07.2026 |
| 12 | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், இவ்வழக்கில் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வினாவுவதற்கு முன்பே 2ம் எதிரி மாரியப்பன் இறந்துவிட்டபடியால், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுவிட்டதாக முடிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 1ம் எதிரியை இதச பிரிவு 395ன் கீழும், 3 முதல் 5 வரையிலான எதிரிகளை இதச பிரிவுகள் 395 உ/இ. 149ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது. | | |
| 13 | தீர்ப்புரை | இவ்வழக்கின் 1ம் எதிரியை இதச பிரிவு 395ன் கீழான குற்றச்சாட்டில் இருந்தும், 3 முதல் 5 வரையிலான எதிரிகளை இதச பிரிவுகள் 395 உ/இ.149ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்தும் குவிமுச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது. | | |
| 14 | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் CP.No.189/2018 ஆக ஆஜர் செய்யப்பட்ட, வழக்குச் சொத்துக்களில் கருப்பு நிற 6G ஆப்பிள் i Phoneஐ, அசா.1றின் இடைக்கால பொறுப்பில் மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற பல்வகை மனு எண்.2297/2019ல் கடந்த 08.04.2019 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப் பொறுத்து அவர் | | |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:15 +0530

| | | |
|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த பிணையப் பத்திரமானது, இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், மேற்படி CP நம்பரில் ஆஜர் செய்யப்பட்ட, சாபொ.1 ஆன சுமார் 69 செ.மீ. நீளமுள்ள இரும்பு பூண் மற்றும் வளைந்த இரும்பு பாகம் உள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய பிச்சுவா அருவாள் ஒன்றை, இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, CP.No.06/2023 ஆக எண்ணிடப்பட்டுள்ளது. அதனை மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. |

இந்த அமர்வு வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 03.07.2026 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. R. நடேச ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

## தீர்ப்புரை

வெளிப்பாளையம் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர், இவ்வழக்கு எதிரிகள் இதச பிரிவு 395ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சொல்லி, வெளிப்பாளையம்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:23 +0530

காவல் நிலைய குற்ற எண்.160/2018 என்ற வழக்கில் குற்ற அறிக்கையினை, கடந்த 03.09.2018 ஆம் தேதி நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனை பார்வையிட்டு, பரிசீலனை செய்து அன்றே மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.32/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் கடந்த 08.10.2021 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவரின் உத்தரவுபடி, விசாரணைக்காக மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு அமர்வு வழக்கு எண்.157/2021 ஆக கடந்த 15.11.2021 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் விசாரணைக்காக கடந்த 15.11.2021 ஆம் தேதிய மேற்படி மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவுபடி, இவ்வழக்கு கோப்பு அனுப்பி வைக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் கடந்த 18.11.2021 ஆம் தேதி பெறப்பட்டுள்ளது.

2. வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.160/2018ல், கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில், வெளிப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மருத்துவமனை ரோடு போகும் சந்தின் அருகே, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பேலஸ் ஹோட்டலிடம், டீ குடித்துவிட்டு இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் ஜெய்னுல் அமீதீன் சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு அருவாள், கத்தியுடன் நின்றுகொண்டிருந்த இறந்துபோன 2ம் எதிரி உட்பட, இவ்வழக்கு எதிரிகள் 5 பேர்களில், 1ம் எதிரி, நிகழ்நிலைப் புகார்தாரர் ஜெய்னுல் அமீதீனின் கழுத்தில் அருவாளை வைத்து அழுத்திக்கொண்டு சத்தம்போட்டால் கழுத்தை அறுத்துவிடுவேன் என்று மிரட்டி, அவரின் பாக்கெட்டில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:31 +0530

இருந்த ரூ.30,000/- மதிப்புள்ள செல்போன் (6G Apple i phone) மற்றும் பணம் ரூ.200/- ஆகியவற்றை பிடுங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு எதிரிகள் 5 பேரும், மேற்படி நிகழ்நிலைப் புகார்தாரரைப் பார்த்து, வெளியில் யாரிடமாவது சொன்னால், ஆட்டுப்பக்கிரி மகனை கழுத்தை அறுத்து கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டி கூட்டுக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இவ்வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவு 395ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக இவ்வழக்கு நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில், இவ்வழக்கின் 2ம் எதிரி மாரியப்பன் இறந்துவிட்டதாக அரசுத்தரப்பில் கூறப்பட்டு, கடந்த 08.06.2022 ஆம் தேதி அவரது இறப்பு இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவருக்கு எதிரான வழக்கானது, குற்றச்சாட்டுக்கள் அற்றுவிட்டதாக சொல்லி இந்நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டுள்ளது. பிணையில் சென்ற இவ்வழக்கு எதிரிகளில், வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத 1, 3 ஆகிய எதிரிகளுக்கு எதிராக பிணையில்விடா பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆஜர் செய்யப்பட்ட, 1ம் எதிரியை கடந்த 29.04.2026 ஆம் தேதியும், 3ம் எதிரியை கடந்த 14.02.2026 ஆம் தேதியும், இந்நீதிமன்ற உத்தரவுபடி நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டு ஆஜர் செய்யப்பட்டு வந்தனர். 5ம் எதிரி நாகப்பட்டினம் நகர காவல் நிலைய குற்ற எண்.119/2026 என்ற வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தவரை இந்த வழக்கு சம்பந்தமாக கடந்த 03.06.2026 ஆம் தேதி முதல் ஆஜரானார். மேற்கண்டவாறு ஆஜர் செய்யப்பட்ட மேற்படி எதிரிகளிடமும், பிணை அடிப்படையில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:40 +0530

ஆஜராகியிருந்த 4ம் எதிரியிடமும், இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளப்பட்டது. பின்னர் அரசு தரப்பு வழக்கறிஞர் மூலம் இவ்வழக்குப் பற்றிய விபரமும், மேற்படி எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளும் கேட்டறியப்பட்டது. பின்னர் இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், கடந்த 24.06.2026 ஆம் தேதி, இவ்வழக்கு எதிரிகளில் 1ம் எதிரி மீது இதச பிரிவு 395ன் கீழும், 3 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 395 உ/இ.149ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வினாவ போதிய முதல்தோற்ற ஆதாரங்கள் இருந்தமையால், அவ்வாறே குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டது. அப்போது, 1ம் எதிரி **"இந்த வழக்கிற்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது பொய் வழக்கு, நான் குற்றவாளி இல்லை**" எனக் கூறி வழக்கின் குற்றச்சாட்டினை மறுத்தார். 3ம் எதிரி **"ஐயா நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். ஐயா பார்க்க வேண்டும் என சொல்லி, காவல் நிலையம் அழைத்து வந்து என்னை இந்த பொய் வழக்கில் சேர்த்துவிட்டார்கள். நான் குற்றவாளி இல்லை**" எனக் கூறி வழக்கின் குற்றச்சாட்டினை மறுத்தார். 4ம் எதிரி **"எனக்கும், இந்த கேசிற்கும் சம்பந்தமில்லை. இது பொய் வழக்கு. நான் குற்றவாளி இல்லை**" எனக் கூறி வழக்கின் குற்றச்சாட்டினை மறுத்தார். 5ம் எதிரியும் **"எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. என் மீது இதுபோன்ற வழக்குகள் எதுவும் இல்லை. வீட்டில் இருந்து அழைத்துவந்து, என் மீது பொய் வழக்கு போட்டார்கள். நான் குற்றவாளி இல்லை**" எனக் கூறி வழக்கின் குற்றச்சாட்டினை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:47 +0530

4. இவ்வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் 7 வரையிலான சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வழக்குச்சொத்தான பிச்சுவா அருவாள் ஒன்று அசா.7 ஆல் அடையாளம் காட்டப்பட்டு, சாபொ.1 ஆக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டது.

5. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு** :

5 (1). கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில், வெளிப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மருத்துவமனைரோடு போகும் சந்தின் அருகே, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பேலஸ் ஹோட்டலிடம், டீ குடித்துவிட்டு இவ்வழக்கின் அசா.1 ஜெய்னுல் அமீதீன் சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு அருவாள், கத்தியுடன் நின்றுகொண்டிருந்த இறந்துபோன 2ம் எதிரி உட்பட, இவ்வழக்கு எதிரிகள் 5 பேர்களில், 1ம் எதிரி, அசா.1 ஜெய்னுல் அமீதீனின் கழுத்தில் அருவாளை வைத்து அழுத்திக்கொண்டு சத்தம்போட்டால் கழுத்தை அறுத்துவிடுவேன் என்று மிரட்டி, அவரின் பாக்கெட்டில் இருந்த ரூ.30,000/- மதிப்புள்ள செல்போன் (6G Apple i phone) ஒன்றையும், பணம் ரூ.200/- ஐயும் பறித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மேற்படி எதிரிகள் 5 பேரும், மேற்படி அசா.1றைப் பார்த்து, வெளியில் யாரிடமாவது சொன்னால், ஆட்டுப்பக்கிரி மகனை கழுத்தை அறுத்து கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டிவிட்டு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:27:54 +0530

சென்றுள்ளார்கள். அசா.1றின் தம்பியான அசா.6 திரு. எம். ஷேக்தாவுது இதயதுல்லா, மேற்படி சம்பவம் குறித்து கேள்விப்பட்டு உடனடியாக சம்பவ இடம் வந்து பார்த்துள்ளார்.

5 (2). சம்பவ இடத்தில் இருந்து அசா.1 அன்று இரவு வீட்டிற்கு சென்றுள்ளார். மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில், அசா.1 வெளிப்பாளையம் காவல் நிலையம் ஆஜராகி, நிலைய அலுவலில் இருந்த காவல் ஆய்வாளரான அசா.7 திரு. D. சிவப் பிரகாசமிடம் அசாஆ.1 ஆன எழுத்துமூலமான புகாரினை கொடுத்துள்ளார். மேற்படி புகாரினைப் பெற்று, வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.160/2018 இதச பிரிவு 395ன் கீழ் அசாஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார்.

5 (3). பின்னர் அசா.7லே, இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளான அசா.4 திரு. காசிபிரசாத் மற்றும் சாட்சி திரு. ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.6 ஆன பார்வை மகசர், அசாஆ.7 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். 1 முதல் 7 வரையிலான பட்டியல் சாட்சிகளை அசா.7 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (4). சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால், அன்றே எதிரிகளை அசா.7 தேடிச்சென்றுள்ளார். அன்று பகல் 12.30 மணியளவில், வெளிப்பாளையம் ரயில்வே ஸ்டேசன் அருகில் கருவைக்காட்டில் மறைந்திருந்த இவ்வழக்கு எதிரிகள் 5 பேரையும் அசா.7 கைது செய்துள்ளார். அப்போது அங்கிருந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:01 +0530

சாட்சிகளான அசா.5 திரு. நாகலிங்கம் மற்றும் சாட்சி திரு. முகம்மது ரஃபீக் ஆகியோர் முன்னிலையில், 1ம் எதிரி அருண்குமார் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அசா.7 பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1ம் எதிரி அருண்குமார் ஆஜர் செய்த, செல்போன் (Apple i phone) ஒன்றையும், சாபொ.1 ஆன பிச்சுவா அருவாள் ஒன்றையும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில், அசாஆ.8 ஆன கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அன்று பிற்பகல் 02.00 மணியளவில் அசா.7 கைப்பற்றியுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை அசா.7 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (5). கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை, எதிரிகளுடன் அசா.7 நிலையம் கொண்டுவந்துள்ளார். எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அசா.7 அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை அசாஆ.9 ஆன படிவம் 91னின் மூலம் நீதிமன்றத்தில் அசா.7 ஆஜர் செய்துள்ளார். அந்த விவரம் அறிந்து மேற்படி வழக்குச் சொத்துக்களில், மேற்படி செல்போனை மட்டும் அசா.1 நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தனது இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார்.

5 (6). வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இவ்வழக்கின் குற்ற அறிக்கையை அசா.7 தாக்கல் செய்துள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:08 +0530

5 (7). அசா.1க்கு சம்பவம் இருட்டில் நடந்ததால், அவரை யார் மறித்தார்கள் ?, அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, அவரிடமிருந்து செல்போனையும், பணத்தையும் யார் பறித்தார்கள் ? என்று அவருக்கு அடையாளம் தெரியாது. இவ்வழக்கு எதிரிகளையும் யார் என்று அசா.1க்கு தெரியாது. நீண்ட நாட்கள் ஆனதால், அவரை மிரட்டப் பயன்படுத்திய கத்தியைப் பார்த்தாலும், அசா.1 ஆல் அடையாளம் காட்ட இயலாது. சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.2 திரு. பரமன், அசா.3 திரு. ஆண்டிசாமி ஆகியோர்களுக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. இவ்வழக்கு எதிரிகளை அவர்கள் பார்த்ததில்லை என்பதால் அவர்களை யார் என்று அவர்களுக்கு தெரியாது. போலீசார் அவர்களை விசாரிக்கவில்லை. பார்வை மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4 திரு. காசிப்பிசாத்திற்கும், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. அசாஆ.6 ஆன பார்வை மகசரில் உள்ள அசாஆ.2 ஆன கையெழுத்து மட்டும் அவருடையதுதான். ஆனால் அசா.4கிற்கு அந்த கையெழுத்தினை எதற்காக, எங்கு, எப்போது போட்டார் ? என்று அவருக்கு தற்போது ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரமும் அசா.4கிற்கு தெரியாது. அசா.4கிடமும் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.5 திரு. நாகலிங்கத்திற்கும், இவ்வழக்கு எதிரிகள் யாரையும் தெரியாது. 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அசாஆ.8 ஆன கைப்பற்றுதல் மகசர் ஆகியவைகளில் முதலில் உள்ள முறையே அசாஆ.3 மற்றும் 4 ஆன சாட்சி கையெழுத்துக்கள் அசா.5 உடையதுதான். ஆனால் அந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:14 +0530

கையெழுத்துக்களை அசா.5 எதற்காக, எங்கு, எப்போது போட்டார் ? என்று தற்போது அவருக்கு ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரங்களும் அசா.5திற்கு தெரியாது. போலீசார் அவரையும் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.6, இந்த சம்பவத்தை கண்ணுறவில்லை. அவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டுத்தான் சம்பவ இடம் சென்றார். அதற்குள் அவரது அண்ணனிடம் செல்போன் மற்றும் பணம் பறித்த நபர்கள் ஓடிவிட்டார்கள். அதனால் அவர் அவர்களை பார்க்கவில்லை.

5 (8). மேற்சொல்லபட்டவாறு அசா.1 முதல் 6 வரையிலான சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிக்கப்பட்டபோதும், அசா.2 முதல் 5 வரையிலான சாட்சிகளை மட்டும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக அனுமதிக்க அரசு தரப்பில் கோரப்பட்டது. அவ்வாறே, அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், அசா.2 முதல் 5 வரையிலான சாட்சிகளை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

**6.** இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அளிக்கப்பட்ட, சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, இன்று 03.07.2026 ஆம் தேதி குவிமுச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ், இவ்வழக்கு எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரிகளில், 1ம் எதிரி **" தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாட்சியம் பொய். பழைய வழக்குகள் இருந்ததால், வீட்டில் இருந்து விசாரணைக்கு என்று அழைத்துவந்து, நடக்காத**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:20 +0530

**சம்பவத்தை நடந்ததாக சொல்லி, இந்த பொய் வழக்கை போட்டுள்ளார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். 3ம் எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாட்சியம் பொய். பழைய வழக்கு இருந்ததால், வீட்டில் இருந்து விசாரணைக்கு அழைத்துவந்து, இந்த பொய் வழக்கை போட்டார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். 4ம் எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாட்சியம் பொய். இந்த வழக்கு பொய் வழக்கு, தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார் மற்றும் 5ம் எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாட்சியம் பொய். பழைய வழக்குகள் இருந்ததால், விசாரணைக்கு என்று வீட்டிலிருந்து அழைத்துவந்து, இந்த பொய் வழக்கை போட்டுவிட்டார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். எனவே எதிரிகள் தரப்பில் சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**7)** தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:26 +0530

**8. <u>தீர்வு</u> :-**

8 (1) அரசுத்தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கு எதிரிகளில், 1ம் எதிரி மீது இதச பிரிவு 395ன் கீழும், 3 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவு 395 உ/இ.149ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களை அரசுத்தரப்பில் பாதிக்கப்பட்ட அசா.1றின் சாட்சியத்தின் மூலமும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அசா.7லின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களின் கீழ் தண்டிக்க வேண்டும் என வாதிட்டார்.

8 (2). எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், அரசுத்தரப்பில் சொல்லப்படுவதுபோல, இவ்வழக்கு சம்பவமே நடைபெறவில்லை. இவ்வழக்கு எதிரிகள் மீது பழைய கொலை, சாராய வழக்குகள் இருந்ததால், அவர்களை மீண்டும் காவலுக்கு உட்படுத்த வேண்டி, நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி, வீட்டிலிருந்து அழைத்து வந்து அவர்களுக்கு எதிராக இந்த பொய்யான வழக்கு போடப்பட்டது. அதனால்தான் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசுத்தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

8 (3). எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் மொத்தம் 7 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவர்கள்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.03 19:28:32 +0530

மூலம் அசாஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்குச்சொத்தான பிச்சுவா அருவாள் அசா.7 ஆல் அடையாளம் காட்டப்பட்டு, சாபொ.1 ஆக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1 இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அசாஆ.1 ஆன புகாரினை கொடுத்தவர். அசா.2, 3 மற்றும் 6 இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள். அசா.4 பார்வை மகசர் சாட்சி. அசா.5, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி. அசா.7 ஆன காவல் ஆய்வாளர், இவ்வழக்கினை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது உள்ளிட்ட, புலன் விசாரணையை மேற்கொண்டு, இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தவர் ஆவார்.

8 (4). மேற்கண்டவாறு எதிரிகள் தரப்பில் வாதிப்பட்டுள்ள சூழ்நிலையில், இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகவும், அசாஆ.1 ஆன புகாரினை கொடுத்ததாகவும் சொல்லி, அசா.1றினை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1றே, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, தன்னை இவ்வழக்கு எதிரிகள்தான் சாபொ.1 ஆன அருவாளை தனது கழுத்தில் வைத்து அச்சுறுத்தி, தன்னிடமிருந்த செல்போன் மற்றும் பணம் ரூ.200/-ஐ பறித்தார்கள் என இவ்வழக்கு எதிரிகளை அடையாளம் காட்டி, அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, **"சம்பவம் இருட்டு நேரத்தில் நடந்ததால், என்னை யார் வழிமறித்தார்கள் ?, எனது கழுத்தில் யார் கத்தியை வைத்து மிரட்டி, என்னிடமிருந்த செல்போனையும், பணத்தையும் பறித்தார்கள் ? என்று எனக்கு அடையாளம் தெரியாது.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:41 +0530

**ஆஜர் எதிரிகளை எனக்கு யார் என்று தெரியாது. நீண்ட நாட்கள் ஆனதால், என்னை மிரட்ட பயன்படுத்திய கத்தியை பார்த்தாலும், அடையாளம் காட்ட இயலாது.**" என அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (5). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.2, 3 மற்றும் 6 ஆகிய சாட்சிகளும், அசா.1றின் கழுத்தில் கத்தியை வைத்து, அசா.1றை அச்சுறுத்தி அவரிடமிருந்து, இவ்வழக்கு எதிரிகள்தான் செல்போன் மற்றும் பணத்தை பறித்த சம்பவத்தில் ஈடுபட்டனர். அதை தாங்கள் கண்ணுற்றோம் என அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, அசா.2 "**நான் வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததே இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை. நாங்கள் ஆட்டோ ஓட்டுவதால், நிறைய வழக்குகளில் நாங்கள் பார்க்காத சம்பவத்தையே, பார்த்ததாக சொல்லும்படி, போலீசார் எங்களை சாட்சிகளாக போட்டுவிடுகின்றனர்**" என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.3ம், "**நான் வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை**" என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.1றின் உடன்பிறந்து தம்பியான அசா.6ம், "**நான் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடம் செல்வதற்குள்,**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:47 +0530

**என் அண்ணனிடம் செல்போன் பறித்த நபர்கள் ஓடிவிட்டார்கள். நான் அவர்களைப் பிடிக்க பின்தொடர்ந்து ஓடிப்பார்த்தேன். அதற்குள் அவர்கள் சென்றுவிட்டதால், என்னால் அவர்களை பிடிக்க முடியவில்லை"** என அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (6). இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அசா.7, நான்தான் இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, கடந்த 14.06.2018 ஆம் தேதி காலை 10.45 மணியளவில், சம்பவ இடம் சென்று அசா.4 மற்றும் சாட்சி திரு. ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.6 ஆன பார்வை மகசர் மற்றும் அசாஆ.7 ஆன மாதிரி வரைபடத்தினை தயார் செய்தேன் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மேற்படி பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4, “**எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. தற்போது காட்டப்படும் அசாஆ.6 ஆன பார்வை மகசரில் முதலில் உள்ள அசாஆ.2 ஆன கையெழுத்து என்னுடையதுதான். ஆனால் அந்த கையெழுத்தினை எதற்காக, எங்கு, எப்போது போட்டேன் ? என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் விசாரிக்கவில்லை"** என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், அசா.7லின் சாட்சியத்தை உறுதிப்படுத்த, பார்வை மகசரில் மற்றொரு சாட்சி கையொப்பமிட்டதாக சொல்லப்படும் சாட்சி ராஜன் என்பவரை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:28:55 +0530

8 (7). இவ்வழக்கு எதிரிகளை அசா.7 ஆன இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, இவ்வழக்கு எதிரிகள் 5 பேரையும் நான்தான் கைது செய்தேன், அப்போது அங்கு வந்திருந்த அசா.5 மற்றும் சாட்சி திரு. முகமது ரஃபீக் ஆகியோர்கள் முன்னிலையில், 1ம் எதிரி இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதனடிப்படையில், 1ம் எதிரி ஆஜர் செய்த ஆப்பிள் ஐ போன் ஒன்றையும், சாபொ.1 ஆன பிச்சுவா அருவாள் ஒன்றையும், அசாஆ.8 ஆன கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அதற்காக மேற்படி சாட்சிகளிடம், மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பம் பெற்றேன் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பமிட்டதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.5, "**தனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. இவ்வழக்கு எதிரிகளையும், தனக்கு யார் என்று தெரியாது. தற்போது காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவைகளில் முதலில் உள்ள முறையே, அசாஆ.3 மற்றும் 4 ஆன கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ஆனால் அந்த கையெழுத்துக்களை எதற்காக, எங்கு, எப்போது போட்டேன் ? என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் விசாரிக்கவில்லை"** என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பமிட்டதாக சொல்லப்படும் மற்றொரு சாட்சியான முகம்மது ரஃபீக் என்பவரை அரசுத்தரப்பில் சாட்சியாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:01 +0530

8 (8). அரசுத்தரப்பில் சொல்லப்பட்டது போல் இவ்வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில், சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டிருந்தது என அசா.6ம் மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அசா.7ம் ஒப்புக்கொண்டுள்ளனர். மேற்கண்டவாறு எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்ட நிலையில், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்த, அந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஏன் சேகரம் செய்து, இந்த வழக்கு சம்பந்தமாக ஆஜர் செய்யப்படவில்லை ? என்பது குறித்து எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் அசா.7லின் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை.

8 (9). மேலும், அசா.7 ஆல் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் அசா.1றுடையது என்பதை உறுதிப்படுத்த எந்தவித ஆவணங்களையும், இந்த வழக்கு சம்பந்தமாக ஆஜர் செய்யப்படவில்லை. அதற்கான காரணங்களையும் அசா.7லிடம் எதிரிகள் தரப்பில் வினாவப்பட்டதற்கும் அவரால் கூற இயலவில்லை. மேற்படி செல்போன்தான் அசா.1றுடையது என்றும், அதை வழக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, அசா.1றின் மூலம் அடையாளம் காட்டி அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை.

8 (10). மேலும் அசா.1றே, தன்னிடம் செல்போன் மற்றும் பணம் பறித்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை யார் என்று தெரியாது என்றும், இவ்வழக்கு எதிரிகளையும் யார் என்று தெரியாது என்றும் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். அவர் கொடுத்ததாக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:08 +0530

சொல்லப்படும் அசாஆ.1 ஆன புகாரிலும், அவரிடம் செல்போன் மற்றும் பணத்தை பறித்த சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களின் பெயர் விவரங்களையும், அங்க அடையாளங்களையும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்லப்படவில்லை என்பதையும், அசா.7 ஆன இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். இந்நிலையில், அசா.1றிடம் செல்போன் மற்றும் பணம் பறித்ததாக சொல்லப்படும் இவ்வழக்கு சம்பவத்தில் இவ்வழக்கு எதிரிகள்தான் ஈடுபட்டார்கள் என்று எதை வைத்து அசா.7 உறுதி செய்துகொண்டு, இவ்வழக்கு எதிரிகளை கைது செய்தார் ? என்பது குறித்து அசா.7லின் மூலம் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும், அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை  என்பதை, அசா.7 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

8 (11). இவ்வழக்கின் சம்பவமானது, கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில், இந்த வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றதாக அரசுத்தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில், அன்று இரவே, அசா.1றிடம் செல்போனை பறித்த நபர்களை அரசு மருத்துவமனையில் வைத்து பிடித்து, காவல் நிலைய ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள் என அளித்த அசா.6றின் சாட்சியத்தை அரசுத்தரப்பில் பொய்யென மறுக்கப்படவில்லை. அசா.6 அளித்த சாட்சியம்படி, சம்பவம் நடந்த அன்று இரவே, அதில் ஈடுபட்டதாக சொல்லி, வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற நபர்கள் யார் ? என்று எத்தகைய ஏற்புடைய விவரங்களையும் அரசுத்தரப்பில் அசா.7லின் மூலம் சொல்லப்படவில்லை. மேற்கண்ட

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:14 +0530

சூழ்நிலையில், இவ்வழக்கின் சம்பவம் குறித்து மறுநாள் காலை 10.00 மணியளவில், அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அசாஆ.1 ஆன புகாரின் அடிப்படையில்தான், இந்த வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு முதன்முதலாக தகவல் வந்ததாகவும், அதனடிப்படையில் அசாஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டதாகவும், அசா.7 அளித்த சாட்சியமானது நம்பும்படியான ஒன்றா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

8 (12). இவ்வழக்கின் அசாஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கை, அசாஆ.6 ஆன பார்வை மகசர், 1ம் எதிரி கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம், அசாஆ.8 ஆன கைப்பற்றுதல் மகசர் மற்றும் சாட்சிகளுடைய குவிமுச.பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்பதை அசா.7 ஆன புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி ஆவணங்கள் அனைத்தையும், கடந்த 14.06.2018 ஆம் தேதியே தயார் செய்யப்பட்டது என ஒப்புக்கொள்ளும் அசா.7, அந்த ஆவணங்களை ஏன் அன்றே எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்பொழுது, ஆஜர் செய்யவில்லை ?- என்பது குறித்தும், மேற்படி ஆவணங்களை காலதாமதத்துடன், கடந்த 03.09.2018 ஆம் தேதிதான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது என்பதற்கும், எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கு எதிரிகள், அசா.1க்கு முன்பின் தெரியாத நிலையில், இவ்வழக்கு எதிரிகளை கைது செய்த பின்னர், அவர்கள்தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டனர் என்பதை உறுதிப்படுத்த, அசா.1றின் மூலம் நீதித்துறை நடுவர் முன்னிலையில், எத்தகைய அடையாள அணிவகுப்பு நடவடிக்கையும்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:20 +0530

மேற்கொள்ளப்படவில்லை. அதனை அசா.7 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்கண்டவாறு அடையாள அணிவகுப்பினை அசா.7 ஏன் மேற்கொள்ளவில்லை ? என்பது குறித்தும், அரசுதரப்பில் அசா.7லின் மூலம் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் சொல்லப்படவில்லை.

8 (13). மேற்கண்ட சூழ்நிலையில், அசா.7லின் சாட்சியத்தை பார்க்கின்றபோது, அவர் சாட்சியமளித்ததுபோல, அவர் இவ்வழக்கு எதிரிகளை கைது செய்தாரா ?, 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றாரா ? மற்றும் அதனடிப்படையில் இவ்வழக்கு சொத்துக்களை கைப்பற்றினாரா ? என்ற சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.7லின் சாட்சியமானது, அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையது இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (14). இவ்வாறு இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட மொத்த சாட்சியங்கள் 7லில், அசா.1 முதல் 6 வரையிலான சாட்சியங்களின் சாட்சியம், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக அமைந்துள்ளது. அசா.7லின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையது இல்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. மேற்கண்ட அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள், சான்றுபொருள், அரசுத்தரப்பு செயல்பாடு மற்றும் எதிரிகள் தரப்பு வாதுரை ஆகியவைகளை பார்க்கின்றபோது, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதா ?, இவ்வழக்கானது 1, 3 முதல் 5

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:26 +0530

வரையிலான இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக தவறாக சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்களை ஜோடித்து போடப்பட்டதா ?, என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. எனவே, 1, 3 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**9. முடிவில்,**

**1, 3 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, இவ்வழக்கு எதிரிகளில், 1ம் எதிரியை இதச பிரிவு 395ன் கீழும், 3 முதல் 5 வரையிலான எதிரிகளை இதச பிரிவுகள் 395 உ/இ.149ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கு எதிரிகளில், 1ம் எதிரியை இதச பிரிவு 395ன் கீழான குற்றச்சாட்டிலிருந்தும், 3 முதல் 5 வரையிலான எதிரிகளை இதச பிரிவுகள் 395 உ/இ.149ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்தும், கு.வி.மு.ச. பிரிவு 235(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**10.** மேற்படி எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:33 +0530

**11. இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் CP.No.189/2018 ஆக ஆஜர் செய்யப்பட்ட வழக்குச்சொத்துக்களில் கருப்பு நிற 6G ஆப்பிள் ஐ போனை, அசா.1றின் இடைக்கால பொறுப்பில் மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற பல்வகை மனு எண்.2297/2019ல் கடந்த 08.04.2019 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப் பொறுத்து அவர் எழுதிக்கொடுத்த பிணையப் பத்திரமானது, இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டுக்காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், மேற்படி CP நம்பரில் ஆஜர் செய்யப்பட்ட, சாபொ.1 ஆன சுமார் 69 செ.மீ. நீளமுள்ள இரும்பு பூண் மற்றும் வளைந்த இரும்பு பாகம் உள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய பிச்சுவா அருவாள் ஒன்றை, இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, CP.No.06/2023 ஆக எண்ணிடப்பட்டுள்ளது. அதனை மேல் முறையீடு அல்லது மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:41 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** -

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| **வரிசை எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு. A.S.M. ஜெய்னுல் அமீதீன் |
| அ.சா.2 | திரு. பரமன் |
| அ.சா.3 | திரு. ஆண்டிசாமி |
| அ.சா.4 | திரு. காசிபிரசாத் |
| அ.சா.5 | திரு. நாகலிங்கம் |
| அ.சா.6 | திரு. M. ஷேக்தாவுது இதயதுல்லா. |
| அ.சா.7 | திரு. D. சிவப்பிரகாசம் - காவல் ஆய்வாளர். |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் :**- இல்லை.

**சான்றாவணப்பட்டியல்:**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.06.2018 | புகார் - அசல் |
| அ.சா.ஆ.2 | 14.06.2018 | பார்வை மகசரில் உள்ள அசா.4கின் கையெழுத்து மட்டும் - அசல். |
| அ.சா.ஆ.3 | 14.06.2018 | 1ம் எதிரி கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் உள்ள அசா.5தின் கையெழுத்து மட்டும் - அசல். |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.03 19:29:48 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.4 | 14.06.2018 | கைப்பற்றுதல் மகசரில் முதலில் உள்ள அசா.5தின் கையெழுத்து மட்டும் - அசல். |
| அ.சா.ஆ.5 | 14.06.2018 | முதல் தகவல் அறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.6 | 14.06.2018 | பார்வை மகசர் - அசல். |
| அ.சா.ஆ.7 | 14.06.2018 | மாதிரி வரைபடம் - அசல் |
| அ.சா.ஆ.8 | 14.06.2018 | கைப்பற்றுதல் மகசர் - அசல் |
| அ.சா.ஆ.9 | 14.06.2018 | படிவம் 91 – அசல். |

<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் :-</u> -இல்லை.

<u>சான்றுப்பொருள் பட்டியல் :</u>

<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:-</u>

சாபொ.1 - சுமார் 69 செ.மீ. நீளமுள்ள இரும்பு பூண் மற்றும் வளைந்த இரும்பு பாகம் உள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய வளைந்த கூரிய முனையுடைய பிச்சுவா அருவாள் ஒன்று.

<u>எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள் :-</u> இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.03 19:29:58 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**

**குறிப்பு**

| | |
|---|---|
| 1 | 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டனர். 5ம் எதிரி PT வாரண்ட் மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 4ம் எதிரி பிணையில் இருந்து ஆஜரானார். |
| 2 | சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை. |
| 3 | இவ்வழக்கின் 1, 3 முதல் 5 வரையிலான எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது. |
| 4 | தீர்ப்பு பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 5 | தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 6 | இவ்வழக்கின் 1, 3 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கு அபராதம் விதிக்கப்படவில்லை. |
| 7 | தீர்ப்பு நாள் - 03.07.2026. |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.03 19:30:07 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**